சார்பு நீதிமன்றம், திருச்செந்தூர்

**முன்னிலை -** திருமதி.எம்.பரமேஸ்வரி, பி.எஸ்ஸி., .பி.எல்.,
சார்பு நீதிபதி, திருச்செந்தூர்
திருவள்ளுவர் ஆண்டு ஸ்ரீவிகாரி வருடம் ஆவணி திங்கள் 02 ஆம் நாள்
2019ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19ஆம் நாள் திங்கட்கிழமை

**அசல் வழக்கு எண். 01/17**

(தூத்துக்குடி சார்பு நீதிமன்ற அ.வ.எண். 46/2014)

1. தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் தாலுகா, ஆத்தூர் அஞ்சல், கதவு எண். 5/44, புன்ன சாத்தன்குறிச்சி, என்ற முகவரியில் வசித்து வரும் ஜோதிபாண்டியன் (லேட்) என்பவரது மனைவி, இந்து, சுமார் 48 வயதுள்ள J. புஷ்பவள்ளி

2. தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் தாலுகா, ஆத்தூர் அஞ்சல், கதவு எண். 5/44, புன்ன சாத்தன்குறிச்சி, என்ற முகவரியில் வசித்து வரும் ஜோதிபாண்டியன் (லேட்) என்பவரது குமாரர், இந்து, சுமார் 23 வயதுள்ள ஆதவன்

3. தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் தாலுகா, ஆத்தூர் அஞ்சல், கதவு எண். 5/44, புன்ன சாத்தன்குறிச்சி, என்ற முகவரியில் வசித்து வரும் ஜோதிபாண்டியன் (லேட்) என்பவரது குமாரத்தி, இந்து, சுமார் 22 வயதுள்ள தீபா

4. தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் தாலுகா, ஆத்தூர் அஞ்சல், கதவு எண். 5/44, புன்ன சாத்தன்குறிச்சி, என்ற முகவரியில் வசித்து வரும் ஜோதிபாண்டியன் (லேட்) என்பவரது குமாரத்தி, இந்து, சுமார் 10 வயதுள்ள உதயலெட்சுமி (மைனர்) (பிறந்த தேதி 13.08.2000) ( நான்காம் வாதிக்கு தாயாரும், காப்பாளருமான ஒன்றாம் வாதி மூலம்) .......வாதிகள்

.எதிர்.

1. தமிழ்நாடு மின்சார வாரியம் அதன் முதன்மை பொறியாளர் மூலம், திருநெல்வேலி.

2. கண்காணிப்பு பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், பீச் ரோடு, தூத்துக்குடி.

3. உதவி பொறியாளர், ஆத்தூர் ......பிரதிவாதிகள்

(பிராது தூத்துக்குடி சார்பு நீதிமன்ற இ.ம எண் 335/11 நாள் 23.02.12 ன் படியும், இந்நீதிமன்ற இடைக்கால மனு எண் 477/17 நாள் 20.02.18 ன் படியும் சீர்திருத்தம் செய்யப்பட்டது.)

பிரதிவாதிகள் வாதிக்கு நஷ்ட ஈடாக ரூ. 10,00,000/- செலுத்த வேண்டுமென்றும் அதில் மேற்கண்ட தொகைக்கு பிராது தேதி முதல் பின் வட்டியும் மற்றும் இவ்வழக்கு செலவு தொகையினை கேட்டும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கலான நாள் (தூத்துக்குடி சார்பு நீதிமன்றம்) | - | 15.11.2010 |
| இந்நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுக்கப்பட்ட நாள் | - | 14.03.2017 |
| வழக்கு மூலம் | - | 06.04.2001, 17.10.2001, 12.11.2009, ஆகிய தேதிகளில் ஆத்தூர், திருச்செந்தூர் தாலுகாவில் வைத்து உண்டாகியிருக்கிறது. |
| ஆள்வரை மதிப்பு | - | ரூ. 10,00,000 /- |
| நீதிமன்ற முத்திரைக் கட்டணம் | - | தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக் கட்டண சட்டம் பிரிவு 22ன் படி ரூ.75,000/- செலுத்தப்பட்டுள்ளது. |

இவ்வழக்கானது, தூத்துக்குடி சார்பு நீதிமன்றத்தில் வறியவர் மனு எண் 293/10 ஆக 15.11.10 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு 27.01.14 இம்மனு அனுமதிக்கப்பட்டு 06.02.14 அன்று அ.வ.எண்.46/2014 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.என்.ராஜேந்திரன் அவர்கள் முன்னிலையாகியும் 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.சி.பாலசுப்பிரமணியன் அவர்கள் முன்னிலையாகியும், பின்னர் இவ்வழக்கானது இந்நீதிமன்ற அதிகாரவரம்பிற்கு உட்பட்டது என்பதால் தூத்துக்குடி முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களின் உத்தரவு A1.No. 1124/17, நாள் 28.02.2017ன் படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் அ.வ.எண். 01/2017 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.என்.ராஜேந்திரன் அவர்கள் முன்னிலையாகியும் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.சுப்பிரமணியன் அவர்கள் முன்னிலையாகியும், வாதி தரப்பு வாதஉரைக்காக நிலுவையில் இருந்த நிலையில் வாதி தரப்பில் ம.சா.1 யை மீண்டும் விசாரிக்க இ.ம.எண் 536/18, இ.ம.எண் 537/18 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு 17.12.18 முதல் 19.08.19 வரை 3ம் எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை சார்வு செய்ய மனுதாரர் தரப்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால் மேற்படி மனுக்கள் 19.08.2019 ல் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>தீர்ப்பாணை</u>

1 இவ்வழக்கானது இ.ம.எண் 536/18, இ.ம.எண் 537/18 தள்ளுபடி செய்யப்பட்டதாலும் வாதிகள் தரப்பில் எவ்வித முகாந்திரமும் தெரிவிக்காத நிலையில் தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

2 செலவுத் தொகை பற்றி உத்தரவு இல்லை

( இருதரப்பிலும் செலவுத் தொகை பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை)

**<u>SCHEDULE</u>**

Tuticorin District, South Authoor Village, Punnaisasthankurichi, Door No.5/44, Worth Rs. 20,000/-

2019ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19ம் நாள் இந்நீதிமன்ற முத்திரையுடன் என்னால் கையொப்பமிடப்பட்டது.

ஒப்பம்/- திருமதி.எம். பரமேஸ்வரி
சார்பு நீதிபதி,
திருச்செந்தூர்.